திரு. கே. பாலாஜி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கடலோரப் பகுதிகளில் புயல் பாதுகாப்பு எச்சரிக்கை கருவிகள் அமைக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் திருப் பாலைவனம், பொன்னேரி, சைதாப்பேட்டை, ஸ்ரீபெரும்புதூர், செங்கற்பட்டு, காஞ்சீபுரம், மதுராந்தகம், சென்னை, கல்பாக்கம் ஆகிய இடங்களில் இந்தப் புயல் எச்சரிக்கைக் கருவிகள் பொருத் தப்பட்டுள்ளன.

கிராமப் பணியாளர்கள்.

741—(வினா எண். 8333)* திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமப் பணியாளர்களை நிரந்தர அரசு ஊழியர்களாக்கு வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கிராம ஊழியர்களை நிரந்தர அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்ற கோரிக்கையை அரசு பரிசீலித்துப் பார்த்து, இப்போது இருந்து வரும் நிலையையே நீடிக்க விடலாம் என்றும் மாற்றம் அவசியம் இல்லையென்றும் முடிவு செய்துள்ளது.

திரு. மு. இராசாங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பணியாளர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் கிராமங்களின் அன்றாட நடவடிக்கைகளிலே தொடர்பு கொண்டு இருப்பவர்கள். சொல்லப் போனால் முழு நேரமும் பணியாற்று பவர்கள். அவர்களை அரசினுடைய நிரந்தர ஊழியர்களாக ஆக்கி, ஊதியத்தையும் அதிகப்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்தக் கிராமக் காவலர், கிராமப் பணியாளர் மற்றும் பாசனக் காவலர்கள் என்றமுறையில் வருகிற இந்தக் கிராம ஊழியர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் பகுதி நேர ஊழியர்களாக இருப்பவர்கள். அவர்கள் 31,572 பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு சிறப்பு மதிப்பூதியமாக ரூ. 300 திங்கள் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அவர்களை

அரசு ஊழியர்களாக ஆக்குவது என்றால் பல சிரமங்கள் ஏற்படக் கூடும். அரசு ஊழியர்களாக ஆக்குகிற சூழ்நிலை ஏற்படுகிற போது இவர்களுடைய கல்வித்தரம் முதலியவற்றை நிர்ண யிக்கிறபோது இந்த முப்பத்து ஓராயிரத்துச் சில்லரை பேர்களில் பலபேரை வீட்டுக்குத்தான் அனுப்ப வேண்டி வரும். ஏனென் றால், இரண்டாவது, மூன்றாவது, நான்காவது வகுப்பு படித் தவர்கள் எல்லாம் கூட இப்போது வேலையில் இருக்கிறார்கள். அரசு சம்பளம் என்று ஆக்குகிறபோது 8-வது படித்திருக்க வேண்டும் என்றெல்லாம் வரும். அப்போது இடர்பாடு ஏற்படக் கூடும். இப்போது அவர்கள் பகுதி நேர ஊழியர்களாக இருக் கிறார்கள். முழு நேர அரசு ஊழியர்களாக ஆக்கினால் அரசுக்குச் செலவும் அதிகமாகும். இப்படிப்பட்ட பல்வேறு காரணங்களை அடிப்படையாக வைத்துத்தான் ஏற்கனவே இருந்து வருகிற வழிமுறை நீடிக்கப்பட்டு வருகிறது.

திரு. மு. ஆனந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பணியாளர்களைப் பொறுத்தவரையில் வட்டாட்சியர் மூலம் நியமிப்பதால் இடையிலே குறுக்குச் செலவு ஏற்படுவதாக அறிகிறேன். ஆகவே, வேலைவாய்ப்புலுவலகம் மூலம் நேர்முகத் தேர்வுக்கு ஏற்பாடு செய்து அந்த வகையில் அவர்களுக்குப் பணி கொடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக இந்தக் கிராமக் காவலர்கள், கிராமப் பணியாளர்கள் மற்றும் பாசனக் காவலர் கள் என்பவர்களைப் பொறுத்த வரையில் கிராமப் பகுதிகளில் இருக்கின்றவர்களுக்குச் சாதாரணமான நிலைமையில் அளிக்கப் படுகிறது. ஆனால் வேலைவாய்ப்பலுவலகத்தின் மூலம் பதிவு செய்து அதன்பிறகுதான் அவர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்றால் பல இடர்ப்பாடுகள் ஏற்படும். அந்த ஊர் நிலைமையை அனுசரித்து அங்கே குடியிருப்பவர்களை வைத்தால்தான் அந்த ஊருக்குப் பொருத்தமாக இருக்குமே தவிர, வேலை வாய்ப்பகத் தில் இருந்து தான் பட்டியல் வரவேண்டும் என்றால் இடர்பாடு அதிகமாக ஏற்படும். பல தொல்லைகள் வரும். ஆகவே, இப் போது இருக்கிற நிலைமைதான் பொருத்தமானதாக இருக்கும்.

திரு. த. புஷ்பராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பணியாளர்களை நியமனம் செய்கிறபோது 30, 35 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றியவர்களுடைய வாரிசாக வருகின்றவர்களைத்தான் எடுக்க வேண்டும் என்ற வகையில் அரசு செயற்குறிப்பு அனுப்புமா ? இப்போது அம்மாதிரி அனுப்பப்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களைக் கட்டாயம் எடுத் துத் தீரவேண்டும் என்ற நிலைமை இல்லை என்றாலும் கூடுமான

வரையில் அங்கே பணியிலே இருந்து ஓய்வு பெற்றவர்களின் குடும்பத்திலே இருப்பவர்களுக்கு, அவர்கள் தகுதி படைத்தவர்களாக இருந்தால், அளிக்கவேண்டுமென்ற கொள்கையைக் கடைபிடித்துத்தான் அவர்கள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள்.

திரு. க. இரா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பணியாளர்களுக்கு 300 ரூபாய் சம்பளம் தரப்படுவதாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தச் சம்பளத்தையாவது இன்னும் கொஞ்சம் கூட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்டச் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருப்பூர் துப்புரவுத் தொழிலாளர் குடியிருப்புகள்.

742—(*வினா எண். 2412) திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர்-தாராபுரம் ரோட்டிலுள்ள நகராட்சித் துப்புரவுப் பணித் தொழிலாளர் குடியிருப்புகள் இடிந்துவிழும் நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) மற்றும் (ஆ) திருப்பூர்-தாராபுரம் சாலையில் உள்ள துப்புரவுத் தொழிலாளர் குடியிருப்புகள் எதுவும் விழும் நிலையில் இல்லை. இருப்பினும் இக்குடியிருப்புகளுக்குத் தேவையான மராமத்து செய்வதற்கு ரூ. 41,000 மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு விரைவில் வேலை துவங்க உள்ளது.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நேரிலே வருவார்களானால், இடிந்து விழும் நிலையில் இருப்பதை நேரடியாக நான் காண்பிக்கத் தயாராக இருக்கிறேன். குறிப்பாக, நகரத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வெளியேறக்கூடிய சாக்கடை நீர் முற்றிலும் அங்கேதான் தேங்கியிருக்கிறது. அந்தத் துப்புரவுத் தொழிலாளர்களின் காலனியை ஒட்டியிருக்கிற தனியார்களுடைய இடத்திலே அந்தச் சாக்கடை நீர் வடிந்து ஓடுவதற்கு அவர்கள் அனுமதிக்காமல் அடைத்து விட்டார்கள். அதனால், மலங்களுடைய சாக்கடை நீரையும்,